**<u>Case No. STC. No.64/2025, Dated: 09.02.2026</u>**

**<u>PW–1–ராஜா (CMP.No.721/2025–ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)</u>**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**<u>(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.25.A.M):–</u>**

**<u>எதிரி ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் 8–ம் வகுப்பு படித்துள்ளேன். அ.சா.ஆ.1–னினை நான் தான் எழுதினேன். சம்பவம் எப்போது நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை 2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் ஆகும். சம்பவம் நடந்த தினத்தன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சுமார் 12.00 மணியிருக்கும். புகாரை பெற்றுக்கொண்டு அன்றைய தினமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரி என்னை நெஞ்சில் எட்டி உதைத்தது சம்மந்தமாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை.

2. இவ்வழக்கு புகார் கொடுத்தன் பின்னிட்டு இச்சம்பவம் தொடர்பாக வேறு ஏதேனும் புகார் வேறு நாளில் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான், எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுத்த தேதியன்றே நிலையத்தில் வைத்து விசாரணை செய்தனர். காவல் நிலையத்திற்கு யார் யார் புகார் கொடுக்க சென்றோம் என்றால் எனது அம்மா பாப்பு, எனது மனைவி ஜானகி, சிவக்குமார் ஆகியோர் உடன் வந்தனர், அவர்களையும் போலீசார் வழக்கு

சம்மந்தமாக விசாரணை செய்தனர். என்னையும், மற்ற சாட்சிகளையும் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட தினத்தன்று விசாரணை செய்ததன் பின்னிட்டு வேறு ஏதேனும் நாளில் எங்கேனும் விசாரணை செய்தனரா என்றால் இல்லை. வேறு ஏதேனும் தேதியில் விசாரணை செய்ததாக குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் சரிதான்.

3. நான் தலைச்சோலை கிராமத்தின் ஊர் தலைவர் என்றால் சரிதான். நான் அண்ணாமலையார் கோவில் கமிட்டி தலைவர் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடம் ஊர் மந்தை என்றால் சரிதான். ஊர் மந்தையில் தான் ஊர் சம்மந்தமாக அனைவரும் ஒன்று கூடி பேசுவோம் என்றால் சரிதான். ஊர் மந்தையை சுற்றி நிறைய வீடுகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தின் போது எதிரி என்னிடம் 1 மணி நேரம் சண்டையிட்டார் என்றால் சரிதாான். அக்கம், பக்கம் உள்ள ஊரார் சுமார் 20 பேர் சம்பவத்தினை வேடிக்கை பார்த்தனர் என்றால் சரிதான். மேற்படி வேடிக்கை பார்த்த நபர்களை போலீசார் விசாரணை செய்தனரா என்றால் அது பற்றி தெரியவில்லை. வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள சிவக்குமார், கந்தசாமி, சந்திரன் ஆகியோர் ண்ணாமலையார் கோவில் கமிட்டி உறுப்பினர்களாக உள்ளனர் என்றால் சரிதான்.

4. புகார் கொடுத்தன் பின்னிட்டு வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. ஊர் மந்தையில் எந்த இடத்தில் வைத்து சம்பவம் நடந்தது என்றால் கிழக்கு பக்கம் மூலையில் வைத்து சம்பவம் நடந்தது

அதன் அருகில் சந்திரன் வீடு, அஞ்சல் நிலையம், EB மணி ஆகியோர் வீடு உள்ளது. சண்டை நடந்த இடத்திற்கும் மேலே குறிப்பிட்ட இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30 அடி தூரம் இருக்கும். எதிரி என் மீதும், கமிட்டியின் மீதும் எதிரியை ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துவிட்டதாக காவல் நிலையத்திலும், RDO அலுவலகத்திலும் புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம். மேற்படி புகாரின் அடிப்படையில் RDO அலுவலகத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எதிரி என் மீதும், கோவில் கமிட்டி உறுப்பினர்கள் மீதும் ஊர் மந்தையில் வைத்து கட்ட பஞ்சாயத்து செய்தது சம்மந்தமாகவும், கோவில் பணத்தை முறைகேடாக பயன்படுத்தியது தொடர்பாகவும் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

5. மேலே குறிப்பிட்டது போல எதிரி தொடர்ந்து என் மீது புகார் கொடுத்துள்ளதால் அதனை முன் விரோதமாக கொண்டு எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று எதிரி ஊரில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சிகளை வழக்கில் சேர்க்காமல் கோவில் கமிட்டி உறுப்பினர்களையும், எனது குடும்பத்தினரையும் மட்டுமே சாட்சிகளாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலே குறிப்பிட்டது போல எதிரி தொடர்ந்து என் மீது புகார் கொடுத்துள்ளதால் அதனை மனதில் கொண்டு

பழிவாங்கும் நோக்கத்தில் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

<u>**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.47.A.M.):-**</u>

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.02.09 12:03:24 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.